# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருடப் பரீட்சை கலை கலாச்சாரப் பீடம் – 2016/2017

## இரண்டாம் அரையாண்டு (Nov, 2019)

# GYS 2223 – Computer Application in Geography

## எழுத்து மூலப் பரீட்சை

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **நேரம்: 2 மணித்தியாலங்கள்**

Q1.

A. தரவுத்தள முகாமை முறை என்பதன் மூலம் நீர் விளங்குவது யாது?

B. பின்வரும் தரவுத்தள வகைகளை உதாரணம் மூலம் விளக்குக.

a. பாரம்பரிய தரவுத்தளம்,

b. பல்லூடக தரவுத்தளம்.

4 புள்ளிகள்

C. தரவுத்தள முகாமை முறையின் பொதுவான செயற்பாடுகள் மூன்றினை விளக்குக.

6 புள்ளிகள்

D. உறவு முறை தரவுத்தள மாதிரி பற்றி சிறு குறிப்பு வரைக. மேலும் அதன் நன்மை தீமைகளை தருக.

6 புள்ளிகள்

E. பொதுவாக தரவுத்தள முகாமை முறையில் பங்குபற்றுபவர்களினை பட்டியலிடுக.

5 புள்ளிகள்

F. தரவுத்தள நிர்வாகி (Database Administrator) ஒருவரின் செயற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

4 புள்ளிகள்

2.

A. RDMBS இன் நன்மைகள் ஐந்தினை தருக.

5 புள்ளிகள்

B. கீழே தரப்பட்ட தரவுத்தளத்தினை உபயோகித்து பின்வருவனவற்றை வெளியீடாகப் கொடுக்க வேண்டிய SQL (Structured Query Language) கட்டளைகளினை எழுதுக.

| Emp_No | Emp_Name | Gender | Department | Telephone | Sal |
|---|---|---|---|---|---|
| E3201 | Mr.R.Satheesh | Male | English | 071-4562138 | Rs.55 |
| E3202 | Mr.P.Raguram | Male | Geography | 077-1824597 | Rs.45 |
| E3203 | Ms.S.Leela | Female | Tamil | 077-7815423 | Rs.53 |
| E3204 | Mr.N.Mafahir | Male | Islam | 075-1237859 | Rs.30 |
| E3205 | Ms.S.Akila | Female | Geography | 071-6521874 | Rs.25 |
| E3206 | Ms.V.Namitha | Female | Tamil | 077-1827435 | Rs.65 |
| E3207 | Ms.T.Banu | Female | English | 071-8124793 | Rs.61 |
| E3208 | Mr.S.Hasan | Male | Islam | 072-1237649 | Rs.56 |
| E3209 | Mr.K.Saran | Male | Tamil | 071-8884572 | Rs.28 |
| E3210 | Mr.G.Gautham | Male | English | 077-1344667 | Rs.42 |

a. ஊழியர்களின் முழு விபரங்களையும் காட்சிப்படுத்துக.
b. English Department இல் பணியாற்றும் ஊழியர்களின் பெயர்களினை மாத்
காட்சிப்படுத்துக.
c. Islam Department இல் பணியாற்றும் ஊழியர்களின் Telephone no மற்றும் S
என்பவற்றை காட்சிப்படுத்துக.
d. Tamil Department இல் பணியாற்றும் பெண் ஊழியர்களின் முழு விபரங்களை
காட்சிப்படுத்துக.
e. Geography Department இல் பணியாற்றும் பெண் ஊழியர்களில் Rs.30,000
கூடுதலாக சம்பளம் பெறும் ஊழியர்களின் முழு விபரங்களை
காட்சிப்படுத்துக.
f. ஆண் ஊழியர்களின் பெயர் மற்றும் Salary என்பவற்றை காட்சிப்படுத்துக.
g. Dialog வலையமைப்பை உபயோகிக்கும் ஊழியர்களின் பெயர் மற்றும் Depart
என்பவற்றை காட்சிப்படுத்துக.
h. Rs.50,000 க்கு கூடுதலாக சம்பளம் பெறும் ஊழியர்களின் முழு விபரங்களை
காட்சிப்படுத்துக.
i. S எனும் எழுத்தை முதல் எழுத்தாகக் (Initial) கொண்ட ஊழியர்களின்
விபரங்களை காட்சிப்படுத்துக.
j. ஊழியர்களின் முழு விபரங்களினையும் அவர்களின் பெயர் ஒழுங்கில்
ஏறுவரிசைப்படுத்துக.

20 புள்

Q3.

A. பொதுவாக ER வரைபடம் ஒன்றில் பயன்படுத்தப்படும் பாகங்களை தருக.

5 புள்ளிகள்

B. ER வரைபடத்தில் பயன்படுத்தப்படும் பண்புகள்(Attibutes) இன் வகைகளை உதாரணத்துடன் விளக்குக.

5 புள்ளிகள்

C. கல்வி நிலையமொன்று அதன் விரிவுரைகள், செய்முறை வகுப்புக்கள், கருத்தருங்குகளை நடாத்துதல் போன்றவற்றை முகாமை செய்ய நேர அட்டவணையொன்றைப் பேணுகின்றது. நேர அட்டவணை மு.ப 8.00 தொடக்கம் மு.ப 10.00, மு.ப 10.00 தொடக்கம் நண்பகல் 12.00, பி.ப 01.00 தொடக்கம் பி.ப 03.00, பி.ப 03.00 தொடக்கம் பி.ப 05.00 ஆகிய இரண்டு மணித்தியால பாட வேளைகளைக் கொண்டுள்ளது. விரிவுரைகள், செய்முறை வகுப்புக்கள், கருத்தருங்குகள் என்பவற்றுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாட வேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. விரிவுரை, ஒரு விரிவுரையாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதோடு செய்முறை வகுப்பு அதனைச் செய்து காட்டும் ஒரு குழாமினால் நடாத்தப்படும். ஆகக் குறைந்தது இரண்டு விரிவுரையாளர்கள் கருத்தருங்குக்குப் பொறுப்பாவார்கள்.

மேலுள்ள நிலைமைக்கான ER வரிப்படத்தினை வரைந்து, ஒவ்வொரு உள்பொருள் (entity) மற்றும் தொடர்புடைமை (relationship) வகையினது பண்புகளை (attributes) அடையாளங் காண்பதுடன், பிரதான சாவிகளையும் (primary keys) அடையாளப்படுத்துக. யாதாயினும் எடுகோள்கள் உமது வடிவமைப்பில் அவசியமாயின் அவற்றை எடுத்துரைக்க.

15 புள்ளிகள்

Q4.

a. தரவு தோற்றம் (Data View) மற்றும் மாறி தோற்றம் (Variable View) என்றால் என்ன?

4 புள்ளிகள்

b. SPSS இல் மாறிகள் தோற்த்தில் (Variable view) காணப்படும் Name கட்டிடத்தினுள் தரவவுகளை உள்ளீடு செய்யும் போது பிரதானமாக கருத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.

6 புள்ளிகள்

c. வினாக்கொத்தொன்றில் காணப்படும் பல்தேர்வு வினாவொன்றினை பகுப்பாய்விற்காக SPSS இனுள் உட்செலுத்தப்படும் செயன்முறையை உதாரணமொன்றின் மூலம் குறிப்பிடுக.

5 புள்ளிகள்

d. புவியியல் கல்வியின் வளர்ச்சியில் தகவல் தொழில் (Information Technology) இன்று கொண்டுள்ள செல்வாக்கு உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

10 புள்ளிகள்